DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-25/2023

Prosecution witness - PW 5

| | | |
|---|---|---|
| Name | : திரு.முனியசாமி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)

05.02.2026 - 04. PM

முதல் விசாரணை:-

1. நான் கடலாடி வட்டம் மூக்கையூர் வருவாய் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தின் போது நான் மேலச்செல்வனூர் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து கூடுதல் பொறுப்பாக கடலாடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். சாட்சி முத்துக்குமாரை தெரியும், அவர் கடலாடி கிராம உதவியாளர் ஆவார்.

2. கடந்த 04.01.2023ம் தேதியன்று நான் கடலாடி கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த போது காலை 10.00 மணியளவில் கடலாடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்னை அழைத்தன் பேரில் நானும், கிராம உதவியாளர் முத்துக்குமாரும் அன்று காலை 10.15 மணியளவில் நெறிஞ்சிப்பட்டிக்கு சென்றோம். காலை 10.15 மணியளவில் போலீசார் எங்கள் முன்னிலையில் விசாரணை செய்த போது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

3. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கு தொடர்புடைய நகை திருட்டு சம்பவத்தை ஒத்துக்கொண்டார். அதன் பேரில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள். போலீசார் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளர் முத்துக்குமாரும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட

பகுதி அ.சா.ஆ.2 ஆகும்.

4. மேலும் இச்சம்பவத்தில் திருடப்பட்ட மீதமுள்ள நகை வங்கியில் வைத்திருப்பதாக சொன்னதன் பேரில் கமுதி, தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கிக்கு காவல் ஆய்வாளருடன் நானும், கிராம உதவியாளரும் சென்றோம். மீண்டும் நெறிஞ்சிப்பட்டிக்கு மதியம் 02.00 மணியளவில் வந்தோம். எதிரி அவருடைய வீட்டில் வைத்து ஆணியை பிடுங்கும் கம்பி, 1 இரும்பு ராடுகளையும் எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அவர்கள் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள்.அந்த அத்தாட்சியில் நானும், முத்துக்குமாரும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆகும். இவ்வழக்கின் எதிரி சேவுகராஜை தெரியும், அவர் ஆஜர் எதிரி தான். இது தொடர்பாக போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன தகவல்களை தான் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எந்த தேதியில் எங்கே வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவ தேதியில் விசாரணை செய்தார்கள். எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். நான் அன்றைய தினம் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 2 கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். நெறிஞ்சிப்பட்டி கிராமத்தில் போலீசார் ஜீப்பிலிருந்து இரும்பு கம்பியை எடுத்தார்கள் என்றால் எதிரி வீட்டிலிருந்து இரும்பு கம்பியை எடுத்து கொடுத்தார். சம்பவ இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. அருகில் 2,3 நபர்கள் இருந்தார்கள். நான் கையொப்பம் செய்த பேப்பரில் தனிநபர்களிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை.

அந்த தனிநபர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட இரும்பு ராடானது எத்தனை அடி உயரம் உள்ளது என்பதை

எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் தோராயமாக தெரிந்து கொண்டேன். நான் கையெப்பம் செய்த பேப்பரில் இரும்பு ராடின் நீளம் எவ்வாறாக போலீசார் தெர்ந்து கொண்டார்களா என்றால் தோராயமாக போலீசார் எழுதினார்கள். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இரும்பு ராடானது என்ன நிறத்தில் இருந்தது என்றால் பச்சை நிறத்தில் இருந்தது. நான் சொல்வது போல் சொன் னஇடத்தில் பொருட்களை எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:50:01 +0530